
# உங்கள் பிள்ளைக்கு ஏற்ற உயர்நிலைப் பள்ளி




உங்கள் பிள்ளையின்  ஆற்றல், ஆர்வம் ஆகியவற்றுக்கு ஏற்பப் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்க  அவர்களுக்கு உதவுங்கள்.

## கேளுங்கள்:

### அவர்களுடைய ஆற்றல், ஆர்வம் திறன்கள் யாவை?

- எந்த வகையான பயிற்சிகள், திட்டங்கள், வாய்ப்புகள் இவற்றை வளர்க்கும்?
- கற்றலின் வேகம் அவர்களுக்கு ஏற்றதாக இருக்குமா?



## பின்வருவனவற்றைக் கவனியுங்கள்:

- **பள்ளியின் பண்பாடு**
- **பயிற்சிகள்**
- **வழங்கப்படும் திட்டங்கள், பாடங்கள்,  இணைப்பாட நடவடிக்கைகள்**
- **அமைந்திருக்கும் இடம், போக்குவரத்து வசதி**
- **உங்கள் பிள்ளை சிறப்புக் கல்வித் தேவைகளை உடையவராக இருந்தால்**
  சிறப்பு வசதிகள் அல்லது வளங்களைக்கொண்ட பள்ளிகளைத் தேர்ந்தெடுங்கள்.



## சமர்ப்பிக்கவும்:

- **6 பள்ளித் தெரிவுகள்**
  இதனால் உங்கள் பிள்ளை விரும்புகின்ற பள்ளியில் சேர்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.
- **வெவ்வேறு குறைந்தபட்ச புள்ளிகள் கொண்ட பள்ளிகள்**
  உங்கள் பிள்ளை தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் பெற்ற  புள்ளிகள் பள்ளியின் குறைந்தபட்ச புள்ளிகளைவிடச் சிறந்ததாக அமைந்திருக்கக்கூடிய 2 - 3 பள்ளிகளைப் பரிசீலிக்கவும்.


## பார்க்கவும்:

**கல்வி அமைச்சின் ஸ்கூல் ஃபைண்டர்**
கற்பிக்கப்படும் பாடங்கள், இணைப்பாட நடவடிக்கைகள்,  பள்ளி அமைந்திருக்கும் இடம்,  தொடர்புத் தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பள்ளிகளைச் சரிபார்க்கவும்.

## உங்கள் பள்ளித் தெரிவுகளின் தரவரிசை முக்கியமானது

பள்ளித் தெரிவுகளின் தரவரிசையில் உங்களுக்கு விருப்பமான பள்ளியை நீங்கள் முதல் நிலையில் வைக்கும்போது ஒத்த புள்ளிகளைப் பெற்ற இரு மாணவர்களுக்கிடையே எவருக்கு ஒரு குறிப்பிட்ட பள்ளி என நிர்ணயிக்கும்போது உங்கள் பிள்ளை அப்பள்ளியில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு மதிப்பெண்களுக்கான வரம்பு ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். ஏனெனில் அவை ஒவ்வோர் ஆண்டும் தேர்வு எழுதும் மொத்த மாணவர்களின் செயல்திறனையும்  தெரிவு முறைகளையும் சார்ந்துள்ளன.





Ministry of Education
SINGAPORE